# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை – 2017

## சைவநெறி

232

| சுட்டெண் .......................... | தரம் :- 08 | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

- மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01. உலகப்படைப்பிற்கு காரணமாக திகழ்பவர்.
    1) இறைவன் 2) மனிதன் 3) தாய் 4) தந்தை

02. இறைவனின் பஞ்ச கிருத்தியம் எனப்படுவது
    1) ஐந்து நிலங்கள் 2) ஐந்து மரங்கள்
    3) ஐந்து தொழில்கள் 4) ஐந்து நிறங்கள்

03. தூலலிங்கம் எனப்படுவது
    1) மூலஸ்தானம் 2) பலிபீடம் 3) கோபுரம் 4) தூபி

04. விசேட காரணத்திற்காக செய்யப்படுபவை
    1) காமியகிரியை 2) நிஷ்காமிய கிரியை 3) நித்தியகிரியை 4) நைமித்தியகிரியை

05. சிவராத்திரி நோற்கப்படுவது
    1) மாசி மாத தேய்பிறை சதுர்த்தசியில்
    2) மாசி மாத வளர்பிறை சதுர்த்தசியில்
    3) மாசிமாத வளர்பிறை சதுர்த்தியில்
    4) மாசி மாத தேய்பிறை சதுர்த்தியில்

06. "ஆன்மாவானது இறைவனை அடைய இறைசிந்தனையுடன் எப்போதும் இருக்க வேண்டும்" என்பதை குறிக்கும் வகையில் இருப்பவர்
    1) விநாயகர் 2) சூரியன் 3) நந்தி 4) சண்டேஸ்வரர்

07. இரு வாரங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் கிரியை
    1) சோமவாரம் 2) மாசிமகம் 3) மாகமகம் 4) பிரதோஷம்

08. பிறந்த நாளில் முக்கியமாக தவிர்க்க வேண்டியது
    1) இறைவழிபாடு 2) பெரியோரிடம் ஆசி பெறுதல்
    3) பகிர்ந்துண்ணல் 4) ஆடம்பரமாக கொண்டாடுதல்

09. எட்டு அவயவங்கள் நிலத்தில் பொருந்துமாறு வணங்குவது
    1) அட்டாங்க நமஸ்காரம் 2) பஞ்சாங்க நமஸ்காரம்
    3) திரியாங்க நமஸ்காரம் 4) சூரிய நமஸ்காரம்

10. கோயில் என சிறப்பித்துச் சொல்லப்படுவது
    1) சிதம்பரத் தலம் 2) திருச்செந்தூரத் தலம்
    3) சீர்காழித்தலம் 4) திருக்கோணேஸ்வரத்தலம்

11. தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மை தருபுவை
    1) கொண்டாட்டங்கள் 2) வீட்டு வழிபாடு 3) பண்டிகைகள் 4) விழாக்கள்

12. சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாளானது
    1) நமஸ்காரம் 2) புதுவருடப்பிறப்பு 3) தீபாவளி 4) நவராத்திரி

13. "அவன் வடிவெல்லாம் நம்மிடத்துக் கொண்ட அன்பே யாம்" எனும் கூற்று யாருடைய அன்பின் மகிமையை உணர்த்த கூறுவதாக உள்ளது.
    1) சிவகோசரியாரது 2) திண்ணனாரின் 3) காடனாரது 4) நாகனாரது

14. மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வழிபட உகந்த இடம்
    1) வீடு 2) பாடசாலை 3) ஆலயம் 4) மடங்கள்



kalvi.lk

15. பூட்டப்பட்டிருந்த கதவினைத் திறப்பதற்காக பாடப்பட்ட தேவரமானது.
1) "கற்றாங்கு எரியோம்பிக்......." 2) "பண்ணினேர் மொழியாள்...."
3) "பெருகலாம் தவம்..........." 4) "மண்ணில் நல்ல......."

16. நாள் மங்கலம் என்பது
1) பிறந்த நட்சத்திரம் 2) ஏர்மங்கலம் 3) தீபாவளி 4) தைப்பொங்கல்

17. 12 வருடங்களுக்கு ஒருமுறை செய்யப்படுவது
1) புதுவருடப்பிறப்பு 2) கும்பாபிஷேகம் 3) பிரமோற்சவம் 4) காமியக்கிரியை

18. கண்ணுக்குப் புலப்படாத கடவுளிலிருந்து உலகம் தோன்றியது என்பது உத்தாலகர் விளக்கினார்
1) உப்பு கல்லை நீரில் கரைத்தன் மூலம்
2) சிறிய ஆலம் விதையிலிருந்து ஆலமரம் உண்டாதல்.
3) ஐதரசன் வாயுவை பலூனில் அடைத்தன் மூலம்
4) மரங்களை வளர்த்தன் மூலம்

19. பஞ்ச புராணத்தின் முதலில் ஓதப்படுவது
1) புராணம் 2) திருவாசகம் 3) தேவாரம் 4) திருவிசைப்பா

20. மூலமூர்த்தியின் குறியீடாக விளங்குவது
1) கோபுரம் 2) நந்தி 3) பலிபீடம் 4) சண்டேஸ்வரர்

(20 x 2 = 40 புள்ளி)

## பகுதி II

### முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினை வரிக்கிரமாக எழுதுக.
அவற்றைப் பாடியவர், பாடப்பட்ட தலம் என்பவற்றை குறிப்பிடுக.

i. கற்றாங்கு எரியோம்பிக் கலியை.......
ii. மண்ணில் நல்ல வண்ணம் ...........
iii. பண்ணினேர் மொழியாள் ..............
iv. பெருகுலாம் தவம் .................

(4+1 + 1 ) x 2 = 12 புள்ளிகள்)

02. "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"

i. ஆலயம் என்பதன் பொருள் யாது?
ii. ஆலயமானது ஒரு மனிதன் படுத்திருக்கும் தோற்றத்தில் அமைகின்றது எனின் அதனை விளக்குக.
iii. சிவலாயம் ஒன்றில் காணப்படும் பரிவாரத் தெய்வங்கள் எவை?
iv. ஆலயத்திற்கு எவ்விதம் செல்ல வேண்டும்?

(2 + 3 + 3 + 4 = 12 புள்ளிகள்)

03. "வாழ்வியற் சடங்குகள் வாழ்பவை வளப்படுத்துகின்றன"

i. வாழ்வியல் சடங்குகள் 3 தருக.
ii. பிறந்த நாளன்று செய்ய வேண்டியவை எவை?
iii. பிறந்த நாள் என்றால் என்ன விளக்குக.
iv. உமது பிறந்த நாள் விழாவில் நீர் தவிர்க்க நினைக்கும் செயல்கள் 3 தருக.

(3 x4 = 12 புள்ளிகள்)



kalvi.lk

04. “பண்டிகைகள் மனித வாழ்க்கையை மகிழ்ச்சியாக்குகின்றன”

i. பண்டிகை என்றால் என்ன?

ii. பண்டிகையின் நன்மைகள் எவை?
நீர் கொண்டாடும் பண்டிகை 3 தருக.

iii. புதுவருடப்பிறப்பு எவ்விதம் கொண்டாடப்படுகின்றது என விபரிக்குக.

iv. புதுவருடத்தின் சிறப்பம்சங்கள் 3 தருக.

(2 + 4 + 4 + 2 = 12 புள்ளிகள்)

05. “சிவாய நம என சிந்திபோருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை”

i. சிவராத்திரி எத்தனை வகைப்படும்? அவற்றைத் தருக.

ii. சிவராத்திரியின் விரத விதிமுறையைக் குறிப்பிடுக.

iii. சிவராத்திரி புராணக்கதை மூலம் விபரிக்கப்படும் படிப்பினை யாது?
இலிங்கோற்ப காலம் எனப்படுவது?

iv. இவ்விரத்தினை அனுட்டிப்பதனால் கிடைக்கப்பெறும் நன்மைகள் யாவை?

(3 + 3 + 3 + 3 = 12 புள்ளிகள்)

06. பல பெயர்களால் இறைவனை வழிபட்டாலும் இறைவன் ஒருவரே

1. கடவுள் என்பதன் பொருள் யாது?
2. கடவுளின் உண்மைத்தன்மை பற்றிக்கூறும் நூல்கள் எவை?
3. கடவுள் எங்கும் பரந்திருக்கின்றார் என்பதை உத்தாலகர் எவ்விதம் விளக்கியுள்ளார்?
4. கடவுளின் இயல்புகள் 3 தருக.

(3 + 3 + 3 + 3 = 12 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றில் இரண்டினைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுகு.

1. நைமித்திய கிரியைகள்
2. பண்டிகைகள்
3. ஆலய வழிபாடு
4. நமஸ்காரங்கள்

(6 x 2 = 12 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457